பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
18 07 2025 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு நரேந்திர மோடி பீகாரில் இன்று சுமார் 7 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.
- நாட்டின் ஏற்றுமதியை அதிகரிக்க வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் என மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் கேட்டுக் கொண்டுள்ளார்.
- ஜம்மு கஷ்மீருக்கு உரிய நேரத்தில் மாநில அந்தஸ்த்து வழங்கப்படும் என பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.
- காசா பகுதியில் கிறிஸ்தவ தேவாலயம் மீது இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலுக்கு அந்நாட்டு பிரதமர் திரு பெஞ்சமின் நேத்தன்யாஹு வருத்தம் தெரிவித்துள்ளார்.
- ஃப்ரீ ஸ்டைல் கிராண்ட்ஸ்லாம் செஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜூன் எரிகேஸி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

பிரதமர் திரு நரேந்திர மோடி பீகாரில் இன்று சுமார் 7 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

இதற்காக அம்மாநிலத்தின் மோதிஹரி சென்ற பிரதமர், பிரமாண்ட சாலைப் பேரணியில் பங்கேற்றார்.

அப்போது மக்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

மோதிஹரில் நடைபெறும் நிகழ்ச்சியில் தர்பங்காவில் அமைந்துள்ள மென்பொருள் பூங்காவை தொடங்கி வைக்கும் பிரதமர், நான்கு அம்ரித் பாரத் ரயில்சேவைகளையும் தொடங்கி வைக்கிறார்.

பின்னர் இன்று மாலை மேற்கு வங்க மாநிலம் துர்காபூர் செல்லும் பிரதமர், அம்மாநிலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள சுமார் 5 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

>><><><><<

நாட்டின் ஏற்றுமதியை அதிகரிக்க வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் என மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கேட்டுக் கொண்டுள்ளார்.

61 நாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களின் வர்த்தகப் பிரிவு தலைவர்களுடன் காணொலி வாயிலாக கலந்துரையாடிய அவர், சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதியை ஊக்குவித்தல், சந்தை அணுகுமுறை உள்ளிட்ட அம்சங்கள் குறித்து கேட்டறிந்தார்.

இந்தியாவின் வர்த்தகம் மற்றும் பொருளாதார கொள்கைகளை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அறிந்து கொள்வதற்கான முதல் இடமாக இந்திய தூதரகங்கள் திகழ வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தினார்.

உலக வர்த்தக அமைப்பு போன்ற பன்னாட்டு அமைப்புகளில், வேளாண்மை, உணவு பாதுகாப்பு மற்றும் மீன்வள தொழில்களுக்கு வழங்கப்படும் மானிய உதவுகளை எடுத்துரைப்பதில், உறுதுணையாக இருக்க வேண்டும் எனவும் தூதரக அதிகாரிகளை திரு பியூஷ் கோயல் கேட்டுக் கொண்டார்.

>><><><<

சுரங்கங்களில் இருந்து வெட்டி எடுக்கப்படும் நிலக்கரியை விரைவாக கொண்டு செல்ல ஏதுவாக ரயில் கட்டமைப்பு வசதிகளை கோல் இண்டியா நிறுவனம் வலுப்படுத்தி வருவதாக நிலக்கரித் துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இதன் ஒரு பகுதியாக சத்தீஷ்கர் மாநிலத்தில் உள்ள **Kharsia – Dharamjaigarh** மற்றும் **Gare-Pelma** இடையே 132 கிலோமீட்டர் தொலைவுக்கு ரயில் பாதை அமைக்கப்பட்டு வருவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் நிலக்கரியை எடுத்துச் செல்வதில் உள்ள தடைகளை அகற்றி சுமூகமான போக்குவரத்தை உறுதி செய்யும் என்றும் திரு கிஷன் ரெட்டி குறிப்பிட்டுள்ளார்.

>><><><<

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரை சுமூகமாக நடத்த அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என மத்திய இணையமைச்சர் திரு அர்ஜூன்ராம் மெஹ்வால் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் அளித்துள்ள ஒரு பேட்டியில் நாளை மறுநாள் அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்திருப்பதை சுட்டிக்காட்டினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, அரசியல் சாசன கட்டமைப்பை மாற்ற முயற்சிப்பதாக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கூறிவரும் குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்த திரு அர்ஜூன்ராம் மெஹ்வால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்தான் அவசர நிலையை பிரகடனப்படுத்துவதற்காக அரசியல் சாசனம் மாற்றப்பட்டதாக தெரிவித்தார்.

>><><><<

ஜம்மு கஷ்மீருக்கு உரிய நேரத்தில் மாநில அந்தஸ்த்து வழங்கப்படும் என பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்துள்ள அவர், இதுதொடர்பாக பிரதமர் திரு நரேந்திர மோடி ஏற்கனவே வாக்குறுதி அளித்திருப்பதாகவும், அது நிச்சயம் நிறைவேற்றப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

சுபான்சு சுக்லாவின் விண்வெளிப் பயணம் இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சிக்கு ஊக்கம் அளிப்பதாக அமையும் என்றும் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

>><><><<

**மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகள் குறித்த விவரங்கள் கடைக்கோடி மக்களையும் சென்றடைவதை உறுதி செய்ய செயற்கை நுண்ணறிவு** தொழில்நுட்பம் **சார்ந்த தீர்வுகளை ஆராயுமாறு தகவல் ஒலிபரப்புத்துறை செயலாளர் திரு.சஞ்சய் ஜாஜு வலியுறுத்தியுள்ளார்**.

**ஹைதராபாதில் தகவல் ஒலிபரப்பு சார்ந்த செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் தொடர்பான புத்தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகளுடன் கலந்துரையாடிய அவர் அரசுத் திட்டங்கள் குறித்த தகவல்கள் அனைத்து மொழிகளிலும் அந்தந்தப் பகுதி மக்களைச் சென்றடையச் செய்வது அவசியம் என்று தெரிவித்**தார்.

>><><><<

மதுபான முறைகேடு தொடர்பான வழக்கில் சத்தீஷ்கர் முன்னாள் முதலமைச்சர் திரு பூபேஷ் பாஹலின் மகன் திரு சைதன்யாவுக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத் துறையினர் இன்று சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

சட்ட விரோத பணப் பரிமாற்றம் தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் விசாரணை நடத்தி வரும் அமலாக்கத் துறையினர் தங்களுக்கு கிடைத்த புதிய ஆதாரங்களின் அடிப்படையில் இந்த சோதனையை மேற்கொண்டுள்ளனர்.

ராய்ப்பூர், பிலாய் உள்ளிட்ட இடங்களில் சோதனை நடைபெறுவதாக அமலாக்கத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

>><><><<

தமிழ்நாடு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

நாடு சுதந்திரம் அடைந்த பின், மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பின், சென்னை மாகாணம் என்ற பெயரில் இயங்கி வந்த தமிழகத்திற்கு, 1967 ஆம் ஆண்டு இதேநாளில் தமிழ்நாடு என பெயர் சூட்டுவதற்கான தீர்மானத்தை அப்போதைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா சட்டப்பேரவையில் கொண்டுவந்ததை நினைவு கூரும் வகையில் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ஆண்டாண்டு காலமாய் இருந்து வந்த கனவு நனவான நாள் என்று தெரிவித்துள்ளார்.

>><><><<

பாரத சாரண – சாரணியர் இயக்கத்தின் தமிழக வடக்கு மண்டல பயிற்சி முகாம் திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலையில் உள்ள குனிகாந்தூரில் நடைபெற்று வருகிறது.

இந்த முகாமை தொடங்கி வைத்து பேசிய மாநில பள்ளி கல்வித் துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சாரண இயக்கத்தில் பணியாற்றும் மாணவர்கள் பேரிடர் காலங்களில் மனிதர்களையும், உயிரினங்களையும் பாதுகாக்க தயாராக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

(சவுண்ட் பைட் - அன்பில் - 41 செகண்ட்ஸ்)

>><><><<

**பரஸ்பர நிதி முதலீட்டாளர்கள் குறித்த விவரங்களை ஆய்வு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் அஞ்சல் துறை மற்றும் இந்திய பரஸ்பர நிதி சங்கத்திற்கிடையே கையெழுத்தாகியுள்ளது.**

**இதன்படி பரஸ்பர நிதி முதலீட்டாளர்கள் தங்களது KYC படிவத்தைப் பூர்த்தி செய்ய அஞ்சல் துறை ஊழியர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.**

**அரசு – தனியார் ஒத்துழைப்பு மூலம் புதுமையான சேவைகளை வழங்குவதென்ற உறுதிப்பாட்டை இந்த ஒப்பந்தம் பிரதிபலிப்பதாகவும் பரஸ்பர நிதி முதலீட்டாளர்களுக்கு உகந்ததாக இருக்கும் என்றும் அஞ்சல் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன**

>><><><<

பாகிஸ்தானிலிருந்து டிரோன்கள் மூலம் பஞ்சாப் மாநிலத்திற்கு போதைப் பொருட்கள் கடத்தப்படுவதை தடுக்கும் முயற்சியை எல்லைப் பாதுகாப்புப் படையினர் முறியடித்துள்ளனர்.

கடந்த சில தினங்களில் போதைப் பொருட்களுடன் ஃபெரோஸ்பூர் பகுதிக்குள் நுழைந்த 6 டிரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டு சுமார் 10 கிலோ எடையுள்ள போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அப்பகுதியில் எல்லைப் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் எமது ஜலந்தர் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><<

காசா பகுதியில் கிறிஸ்தவ தேவாலயம் மீது இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலுக்கு அந்நாட்டு பிரதமர் திரு பெஞ்சமின் நேத்தன்யாஹு வருத்தம் தெரிவித்துள்ளார்.

அங்குள்ள தி ஹோலி பேமிலி தேவாலயம் மீது இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் 3 பேர் உயிரிழந்ததுடன் 10 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதற்கு கத்தோலிக்க மதத் தலைவர் போபாண்டவர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேத்தன்யாஹு வருத்தம் தெரிவித்துள்ளார்.

>><><><<

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

லாஸ்வேகாசில் நடைபெற்று வரும் ஃப்ரீ ஸ்டைல் கிராண்ட்ஸ்லாம் செஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜூன் எரிகேஸி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் அவர், உஸ்பெகிஸ்தானின் நோடிபெக்கை வென்றார்.

>><><><<

மெக்ஸிகோவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - அமெரிக்காவின் **Reese Stalder** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 7-5, 6-1 என்ற செட்கணக்கில் மெக்ஸிகோவின் **Manuel Sanchez –** ஆஸ்திரேலியாவின் **Bernard Tomic** இணையை வென்றது.

>><><><<

தாய்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Zeel Desai** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 6-3, 6-0 என்ற செட்கணக்கில் சீனாவின் **Qiu Yu Ye** -ஐ வென்றார்.

>><><><<

ஸ்பெயினில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Aryan Sha** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>><><><<

<u>மீண்டும் தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி பீகாரில் இன்று சுமார் 7 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

2. நாட்டின் ஏற்றுமதியை அதிகரிக்க வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் என மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. ஜம்மு கஷ்மீருக்கு உரிய நேரத்தில் மாநில அந்தஸ்த்து வழங்கப்படும் என பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

4. காசா பகுதியில் கிறிஸ்தவ தேவாலயம் மீது இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலுக்கு அந்நாட்டு பிரதமர் திரு பெஞ்சமின் நேத்தன்யாஹு வருத்தம் தெரிவித்துள்ளார்.

5. ஃப்ரீ ஸ்டைல் கிராண்ட்ஸ்லாம் செஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜூன் எரிகேஸி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>><><><<